ORIGINAL ARTICLE

# இரண்டாம் படிவ மாணவர்களிடையே வேற்றுமை உருபின் ஆளுமை

**[IRANDAM PADIVA MAANAVARKALIDAIYEE VEERRUMAI URUPIN AALUMAI]**

# THE UNDERSTANDING OF VETRUMAI URUBHU AMONG FORM TWO STUDENTS

**மு. இரமேஷ் ராஜ் [1] / M. Ramesh Raaj [1]**

[1]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. / Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: rameshraajmurugan24@gmail.com

DOI: https://doi.org/10.33306/mjssh/58

**ஆய்வுச் சாரம்**

இலக்கணம் ஒரு மொழியின் முக்கியக் கூறாகும். ஒரு மொழியைப் பிழையின்றி பயன்படுத்த அம்மொழியின் இலக்கணம் முக்கியப் பங்காற்றுகிறது. ஆனால், மாணவர்களிடத்தில் இலக்கண திறனின் ஆளுமை குறைந்து காணப்படுகிறது. அவ்வகையில், இவ்வாய்வு இரண்டாம் படிவ மாணவர்களிடையே வேற்றுமை உருபின் ஆளுமையை ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. மாணவர்களிடத்தில் இந்த வேற்றுமை உருபின் பயன்பாடு சற்றுச் சிக்கலாகவே உள்ளன. அதன் அடிப்படையில், இவ்வாய்வுத் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்குக் கேள்வி நிரல் 60 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டன. இவ்வாய்வு பாத்தாங் படாங் வட்டாரத்தில் உள்ள மூன்று இடைநிலைப்பள்ளிகளை உட்படுத்தபட்டன. இவ்வாய்வின் வழி மாணவர்கள் வேற்றுமை உருபின் மீதுள்ள கருத்துகளை அடையாளம் காணப்பட்டு இவ்வாய்வுக் கட்டுரை எழுத்தப்பட்டுள்ளது.

**கருச்சொற்கள்:** வேற்றுமை உருபு, இரண்டாம் படிவ மாணவர்கள், தமிழ் மொழி, இலக்கணம், தமிழ் மாணவர்கள்

**Abstract**

Grammar is the core of a language. The grammar of the language plays an important role in the smooth use of a language. However, the grammatical skills is diminished in students. As such, the study was carried out with the aim of examining Vertumai Urubu in form two students. The

use of Vertumai Urubu is found that problematic in students. Based on this, 60 students were given a quiz to collect data on this issue. This study involved three secondary schools in the Batang Patang district. This article is written as concept paper compiling students' view on Vertumai Urubu.

**Keywords:** Vetrumai Urubu, Form two students, Tamil language, grammar, Tamil students

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 29th July 2019, revised 18th August 2019, accepted 11th September 2019

**முன்னுரை**

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல், ஆகியவை ஒன்றினைந்து சமன்நிலையும் பெற தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுச் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும் (கிங்ஸ்டன் பால் தம்புராஜ், 2016)[1]. மலேசியாவில் தமிழ்க்கல்வி 2017 ஆண்டுடன் 200 ஆண்டுக்கால வரலாற்றினைப் பெற்றது. மறுசீரமைக்கப்பட்ட இடைநிலைப்பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தமிழ்மொழி பாடத்திட்டத்தில் நான்கு திறன்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அவை கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகும். இலக்கணமும் செய்யுள் மொழியணியும் தமிழ்மொழி பாடவேளையில் ஆசிரியரால் ஒருங்கிணைத்துக் கற்பிக்கப்பட்டது. தற்பொழுது, இடைநிலைப்பள்ளிகளுக்கான தர அடிப்படையிலான கலைத்திட்டத்தில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து, இலக்கணம், செய்யுள் மொழியணிகள் என ஆறு திறன்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது (அருள்நாதன் விசுவாசம், 2019)[2]. ஆனால், மாணவர்கள் இன்றளவும் இலக்கணத்தில் பல சிக்கல்களை எதிர்நோகி வருகின்றனர். இலக்கணத்தில் வேற்றுமை உருபு மிக முக்கியமான பகுதியாகும் (சீனி நைனா முகமது, செ. 2014)[3]. குறிப்பாக, மாணவர்கள் வேற்றுமை உருபு பகுதியில் அதிகமான சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

**ஆய்வு நோக்கம்**

இவ்வாய்வு இரண்டாம் படிவ மாணவர்களிடையே வேற்றுமை உருபு மீதான கண்ணோட்டத்தை ஆராய மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் வேற்றுமை உருபு மீதான கண்ணோட்டத்தை ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டது.

அட்டவணை 1:

*வேற்றுமை உருபு மீதான இரண்டாம் படிவ மாணவர்களின் கண்ணோட்டம்*

| எண் | கண்ணோட்டம் |
|---|---|
| 1. | தமிழ்மொழி பாடத்தின் மீதான கண்ணோட்டம் |
| 2. | வேற்றுமை உருபின் ஆர்வநிலை மீதான கண்ணோட்டம் |
| 3. | வேற்றுமை உருபு மீதான கண்ணோட்டம் |
| 4. | ஆசிரியரின் கற்பித்தல் மீதான கண்ணோட்டம் |
| 5. | கற்றல் சூழல் மீதான கண்ணோட்டம் |

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வில் அளவுசார் முறை கையாளப்பட்டது. இவ்வாய்வில் தமிழ்மொழியைப் பாட அட்டவணைக்குள் கற்றுக்கொடுக்கும் பாத்தாங் படாங் வட்டாரத்தில் உள்ள மூன்று இடைநிலைபள்ளிகளை உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வில் தமிழ்மொழியைத் தேர்வு பாடமாக எடுக்கும் 60 மாணவர்களை உட்படுத்தப்பட்டது. இவ்வாய்விற்கு வினா நிரல் இரண்டாம் படிவ மாணவர்கள் வேற்றுமை உருபின் மீது வைத்துள்ள கண்ணோட்டத்தைக் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்பட்டது. வினா நிரல்களின் வழி கிடைக்கப்பெற்ற தகவல்களை *'statistical Package for Socaial Sciences (SPSS)'* பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## ஆய்வு கண்டுபிடிப்பு

அட்டவணை 2

*ஆய்வின் கண்ணோட்டம்*

| கண்ணோட்டம் | mean | S. deviation |
|---|---|---|
| தமிழ்மொழி பாடத்தின் மீதான கண்ணோட்டம் | 2.57 | 0.621 |
| வேற்றுமை உருபின் ஆர்வநிலை மீதான கண்ணோட்டம் | 2.40 | 0.616 |
| வேற்றுமை உருபு மீதான கண்ணோட்டம் | 2.45 | 0.669 |
| ஆசிரியரின் கற்பித்தல் மீதான கண்ணோட்டம் | 2.32 | 0.701 |
| கற்றல் சூழல் மீதான கண்ணோட்டம் | 2.12 | 0.783 |

அட்டவணை 3
*ஆய்வின் வரையறை*

| வரையறை | நிலை |
|---|---|
| 1.00 | குறைவு |
| 2.00 | நடுநிலை |
| 3.00 | அதிகம் |

**தமிழ்மொழி பாடத்தின் மீதான கண்ணோட்டம்**

இவ்வினா நிரலின் வழி மாணவர்களுக்குத் தமிழ்மொழியின் மீது நல்ல கண்ணோட்டத்தை வைத்திருகின்றனர் என கண்டறியப்பட்டது. 50% மாணவர்களால் தமிழ்மொழியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு வாய்மொழியாகவும் எழுத்துவடிவிலும் பதிலளிக்க முடியும் எனக் கண்டறியப்பட்டது. மேலும், 30 மாணவர்களுக்குத் தமிழ்மொழி கற்க மிக அதிகமாகப் பிடிக்கும் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. தமிழ்மொழி பாடத்தின் மீதான கண்ணோட்டம் சராசரி 2.57 என காட்டுகிறது. இக்கண்ணோட்டம் நடுநிலையானது எனக் குறிப்பிடுகிறது.

**வேற்றுமை உருபின் ஆர்வநிலை மீதான கண்ணோட்டம்**

இவ்வினா நிரலின் வழி மாணவர்களுக்கு வேற்றுமை உருபின் ஆர்வநிலை மீதான கண்ணோட்டத்தை வைத்திருகின்றனர் எனக் கண்டறியப்பட்டது. 55% அல்லது 33 மாணவர்கள் தாங்கள் நேர்மறை (positive) எண்ணத்துடன் வேற்றுமை உருபைப் படிக்கிறார்கள் எனக் கண்டறியப்பட்டது. 5% அல்லது 3 மாணவர்கள் தங்களுக்கு வேற்றுமை உருபு பற்றி மேலும் அறிந்துகொள்ள ஆர்வமாக உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர். வேற்றுமை உருபின் ஆர்வநிலை மீதான கண்ணோட்டம் சராசரி 2.40 என காட்டுகிறது. இக்கண்ணோட்டம் நடுநிலையானது எனக் குறிப்பிடுகிறது.

**வேற்றுமை உருபு மீதான கண்ணோட்டம்**

இவ்வினா நிரலின் வழி மாணவர்களுக்கு வேற்றுமை உருபின் மீதான கண்ணோட்டத்தை வைத்திருகின்றனர் எனக் கண்டறியப்பட்டது. 53.3% அல்லது 32 மாணவர்கள் வேற்றுமை உருபின் வகைகளை அடையாளம் காண முடியும் எனக் கண்டறியப்பட்டது. 26 அல்லது 43.4% மாணவர்களால் வேற்றுமை உருபைச் சரியான முறையில் பயன்படுத்தவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர் எனக் கண்டறியப்பட்டது. வேற்றுமை உருபின் மீதான கண்ணோட்டம் சராசரி 2.45 எனக் காட்டுகிறது. இக்கண்ணோட்டம் நடுநிலையானது எனக் குறிப்பிடுகிறது.

### ஆசிரியரின் கற்பித்தல் மீதான கண்ணோட்டம்

இவ்வினா நிரலின் வழி மாணவர்களுக்கு ஆசிரியரின் கற்பித்தல் மீதான கண்ணோட்டத்தை வைத்திருகின்றனர் எனக் கண்டறியப்பட்டது. 36.6% அல்லது 22 வேற்றுமை உருபில் சிக்கல்களை எதிர்நோக்கும் போது, ஆசிரியர் குறைந்த வழிகாட்டியை தருகிறார் எனக் கண்டறியப்பட்டது. 27 அல்லது 45.0% ஆசிரியர் வேற்றுமை உருபை முறையாகக் கற்றுக்கொடுக்கிறார் எனக் கண்டறியப்பட்டது. ஆசிரியரின் கற்பித்தல் மீதான கண்ணோட்டம் சராசரி 2.32 எனக் காட்டுகிறது. இக்கண்ணோட்டம் நடுநிலையானது என குறிப்பிடுகிறது.

### கற்றல் சூழல் மீதான கண்ணோட்டம்

இவ்வினா நிரலின் வழி மாணவர்களுக்குக் கற்றல் சூழல் மீதான கண்ணோட்டத்தை வைத்திருகின்றனர் எனக் கண்டறியப்பட்டது. 66.7% அல்லது 40 மாணவர்களிடையே வேற்றுமை உருபின் ஆளுமையை அதிகரிக்க பள்ளி நிர்வாகம் பல்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர் எனக் கண்டறியப்பட்டது. 38 அல்லது 63.3% மாணவர்களிடையே வேற்றுமை உருபின் ஆளுமையை வளப்படுத்த பள்ளி நிர்வாகம் குறைவான சலுகைகளை ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் வழங்கியுள்ளது எனக் கண்டறியப்பட்டது. வேற்றுமை உருபின் மீதான கண்ணோட்டம் சராசரி 2.12 என காட்டுகிறது. இக்கண்ணோட்டம் நடுநிலையானது என குறிப்பிடுகிறது.

### தொகுப்புரை

சுருங்கக்கூறின், இரண்டாம் படிவ மாணவர்களிடையே வேற்றுமை உருபு மீதான கண்ணோட்டம் குன்றியே உள்ளது. மாணவர்கள் வேற்றுமை உருபின் மீது அதிகபட்சமான ஆர்வத்தைக் காட்டாவிடிலும், ஓரளவு நல்ல கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளனர். இக்கண்ணோட்டம் மேலும் ஓங்க, ஆசிரியர்கள் முக்கிய பங்காற்றுகின்றனர். ஆகவே,

ஆசிரியர்கள் இன்னும் பல உத்திமுறைகளைப் பயன்படுத்தி வேற்றுமை உருபைக் கற்றுக்கொடுத்தால் மாணவர்கள் சிறந்து விளங்குவர்.

**துணைநூற்பட்டியல் :**


1. Kingston Paul Tamburaj. (2016). *New approaches in teaching Tamil language (தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் புதிய அணுகுமுறைகள்).* Tanjong Malim: Sultan Idris Education University.
2. Arulnathan Visuvasam. (2019). *Introduction in academic research (கல்வியல் ஆராய்ச்சி: ஓர் அறிமுகம்).* Ulu Kinta: Teachers Training College.
3. Seeni Naina Mohamed, S. (2014). *Nalla Tamil ilakkanam (நல்ல தமிழ் இலக்கணம்).* Selangor: Sara Pestagon Sendirian Berhad.